THE HON. THIRU S. RAMACHANDRAN : It is only in that same spirit, the District Collector of Coimbatore has invited representatives of both the Auto-rickshaw drivers and the representatives of Cheran Transport Corporation employees and he has worked out a settlement, the understanding being that it should be honoured as long as they could. That is all.

திரு. துரைமுருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் முதல் வரிசையில் ஒருவர்கூட கிடையாது. அவர்கள் என்ன ஆனார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எதிர்க் கட்சியில் அங்கத்தினர்களே இல்லாமல் போய்விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(5) அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் சட்டப் பேரவை சட்ட முன்வடிவுகள், திருத்தம் எதுவுமின்றி, 30—11—1973-ம் நாளன்று சட்ட மேலவையில் நிறை வேற்றப்பட்டனவென்று மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல் திறனை நிறுத்தி வைத்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73).

2. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/73).

3. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/73.).

மேலும், கீழ்க்காணும் சட்டப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் எதுவுமின்றி 1—12—1973-ம் நாளன்று சட்ட மேலவையில் நிறைவேற்றப்பட்டனவென்றும் செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/73).

1973 டிசம்பர் 4] [பேரவைத் தலைவர்]

2. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73).

தவிர, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73), மற்றும், தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி, முறையே 30—11—1973, 1—12—1973 ஆகிய நாட்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் செய்தி வரப்பெற்றுள்ளது.

(6) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/72) கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை* கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிய அனுமதி கோருகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு இம்மாமன்றத்தில் முன்பு கொண்டு வரப்பட்டதும், அதை ஆய்ந்து பரிந்துரைகள் செய்ய கூட்டு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டதும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். கூட்டு ஆய்வுக் குழு செய்த திருத்தங்கள் அடங்கிய சட்ட முன்வடிவு 29—11—1973 அன்று வைக்கப்பட்ட கூட்டு ஆய்வுக் குழு அறிக்கையில் அடங்கியுள்ளது. குழு செய்துள்ள முக்கிய திருத்தங்கள் அந்த அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஒருசிலவற்றைப் பற்றி நான் இப்பொழுது குறிப்பிட விரும்புகின்றேன்.

---

* 29—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.